# கொக்குத்தொடுவாயில் இன்றும் புதைகுழி தோண்டப்பட்டது மனித எச்சங்களுடன் தோட்டாக்களின் பகுதிகளும் கிடைத்தன





**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணியின்போது மனித எச்சங்களுடன், துப்பாக்கித் தோட்டாக்கள் என சந்தேகிக்கப்படும் சில உலோகத் துண்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

**முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்டன.**

**குறித்த பணிகள் முல்லைத்தீவு நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன.**


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 20 வெள்ளிக்கிழமை 08.09.2023 கதிர் 68



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## உயிர்த்த ஞாயிறு மீள் விசாரணையை ஷானி அபேசேகரவிடம் வழங்குக!

### சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்



உயர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை ஷானி அபேசேகரவிடம் ஒப்படைக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாரபட்சமின்றி வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் பல நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்படும் நிலை கொழும்புப் பிரதேசத்தில் காணப்படுவதாகவும், உயர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகப் பக்கச்சார்பற்ற முறையில் ஆராயுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் 2➤

## இராணுவத்தினரிடம் சரணடைந்த பிள்ளைகளே கொக்குத்தொடுவாயில் புதைக்கப்பட்டுள்ளனர்

### துரைராசா ரவிகரன் உறுதியுடன் தெரிவிப்பு



சரணடைந்த பிள்ளைகளையே கொக்குத்தொடுவாயில் புதைத்திருக்கிறார்கள் எனவும் பல உடலங்கள் இதில் மேலும் தென்படலாம் எனவும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தாங்கள் அவதானித்த வகையில் பெண்ணினுடைய உடலங்களை உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது என அவர் குறிப்பிட்டார்.

அதே நேரம் சட்ட வைத்திய 2➤

## கல்விக் கொள்கைகளை அரசியலுக்கும் அமைச்சர்களுக்குமேற்ப மாற்றமுடியாது!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி



நாட்டின் கல்விக் கொள்கைகளை அரசியலுக்கு அடிபணியவோ அமைச்சர்களின் தேவைக்கேற்ப மாற்றவோ இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.

எப்பாவல சித்தார்த்த மத்திய கல்லூரியின் 150 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழா நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் புதிய கல்வி முறைக்கான அவசியம் தோன்றியுள்ளது. அதற்கமைய அடுத்துவரும் 20 - 30 ஆண்டுகளுக்குப் பொருத்தமான 2➤

## யாழில் கடந்த இரண்டு மாதங்களில் 13 மோட்டார் சைக்கிள்கள் திருட்டு!

யாழ் நகரில் கடந்த 2 மாதங்களுக்குள் 13 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைச் சூழல் மற்றும் மத்திய பேருந்து நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளிலேயே இவ்வாறு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாகவும், இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக உரிமையாளர்களால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் திருட்டில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, குறித்த திருட்டுக் கும்பல்கள் வலையமைப்பாக செயற்பட்டு வருவதாகவும், 2➤

## அரிசியை அதிக விலைக்கு விற்றால் 1977 என்ற எண்ணுக்கு அறியத்தாருங்கள்!

### நுகர்வோர் அதிகார சபை தெரிவிப்பு

தற்போது சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான தகவலைக் கருத்தில் கொண்டு, நுகர்வோர் அதிகார சபை சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது.

அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, கீரி சம்பா ஒரு கிலோகிராம் 260 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோகிராம் 230 ரூபாவுக்கும், நாட்டரிசி ஒரு கிலோகிராம் 220 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும்.

அத்துடன், ஒரு கிலோ சிவப்பு அரிசியை விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு அதிகமான விலையில் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமை 2➤

## யாழில் இளையோரைப் போதைக்கு அடிமையாக்கும் கும்பல் மாட்டியது!

### பெண் உள்ளிட்ட நால்வர் கைது



யாழ்ப்பாணத்தில் பதின்ம வயதினரைப் போதைக்கு அடிமையாக்கும் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனும் குற்றச்சாட்டில் யாழில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் பணிபுரியும் பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மற்றும் பதின்ம வயது 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -




# ஜி - 20 மாநாடு நாளை ஆரம்பம்!

உலகின் அதிகாரம் மிகுந்த அமைப்புகளில் ஒன்றான ஜி - 20 அமைப்பின் அரச தலைவர்கள் உச்சி மாநாடு இந்தியாவில் நாளை ஆரம்பமாகின்றது.

ஜி - 20 அமைப்பின் தலைமைப் பதவியை இம்முறை இந்தியா வகிக்கின்றது. இதன்படி இந்தியாவின் தலைமையில், பல்வேறு நகரங்களில் ஜி - 20 பிரதிநிதிகள் பங்கேற்ற பல்வேறு துறை சார்ந்த கூட்டங்கள் நடைபெற்றன.

இதன் தொடர்ச்சியாக ஜி - 20 அரச தலைவர்களின் உச்சி மாநாடு டில்லியில் நாளையும் நாளை மறுநாளும் நடைபெறவிருக்கின்றது.

இந்தியா தலைமை தாங்கி நடத்தும் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதைப்போல உறுப்பினர் அல்லாத பல்வேறு நாடுகளும் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்கின்றன.

உலக வல்லரசு நாடுகள் உட்பட முக்கியமான நாடுகளின் தலைவர்கள் பங்கேற்வுள்ளதால், இதற்காக இந்தியத் தலைநகரில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மிகுந்த உத்வேகத்துடன் ஜி - 20 உச்சி மாநாட்டுக்கான தயாரிப்புகளையு இந்திய அரசு இறுதி செய்து வருகின்றது.

பிலிப்பைன்சில் இருந்து மாநாட்டில் பங்கேற்க அவுஸ்திரேலியப் பிரதமர் டில்லி செல்கின்றார். அமெரிக்கா ஜனாதிபதியும் இன்று இந்தியா வருகின்றார். (03)

# குழந்தையின் சடலம் மாயம்

வவுனியா - இராசேந்திரகுளம் பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்ட இரண்டு வயதுக் குழந்தையின் சடலம் காணாமல்போயுள்ளது.

குழந்தையின் தாயாரால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

நீர்த் தாங்கி வீழ்ந்தமையால் குறித்த இரண்டு வயதுக் குழந்தை உயிரிழந்த நிலையில் கடந்த மாதம் 26 ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

தாயாரால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குழந்தையின் சடலம் காணாமல்போயுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03, க)

## யாழில் இளையோரைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளையோரைப் போதைக்கு அடிமையாக்கி, அவர்களுக்குப் போதைப்பொருளை விற்பனை செய்து வரும் கும்பல் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் யாழில் உள்ள தனியார் வைத்தியசாலையில் பணிபுரியும் பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வரை நேற்றுப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், கைது செய்யப்பட்ட பெண் உள்ளிட்ட நால்வரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும், குறித்த நபர்கள் யாழில் இயங்கும் பாரிய போதைக்கும்பலின் வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் எனவும், தொடர் விசாரணைகளின் அடிப்படையில் அவர்களின் வலையமைப்பைக் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன எனவும் தெரிவித்தனர். (03)

## அரிசியை அதிக விலைக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டால், தனிநபரால் நடத்திச் செல்லப்படும் வர்த்தக நிலையத்துக்கு ஒரு லட்சம் முதல் 5 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு 5 முதல் 50 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக 1977 என்ற துரித இலக்கத்திற்கு அறிவிக்குமாறு நுகர்வோர் அதிகார சபை பொதுமக்களிடம் கோரியுள்ளது. (04)

## யாழில் கடந்த இரண்டு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை பாகங்களாகக் கழற்றி விற்பனை செய்வதனால், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை மீட்பதும் திருடர்களைக் கைது செய்வதும் பெரும் சவாலாக உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறு இருப்பினும், இவை குறித்து தீவிர விசாரணைகளை தாம் முன்னெடுத்து வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (04)

## கல்விக் கொள்கைகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

புதிய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட விடயங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

மேலும், 1989 இல், தொழில் வாய்ப்புக்களை இலக்கு வைத்து 'அசோசியேட்' பட்டம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு அக்காலத்தில் இருக்கவில்லை. அதனைத் தற்போது நடைமுறைப்படுத்த முடியும் என எதிர்பார்க்கிறேன்.

இலங்கை, உலகிற்கு ஒரு பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும். கல்விக் கொள்கையை அரசியலுக்கு அடிபணிய இடமளிக்கக்கூடாது.

மேலும், அமைச்சர்களின் தேவைக்கேற்ப மாற்றவும் வாய்ப்பு வழங்கக் கூடாது. கல்விக் கொள்கையைச் சட்டமாக்கி, அதனைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பொருளாதாரச் சரிவுக்குப் பின்னர், இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் இந்த நேரத்தில் நாட்டின் துரித அபிவிருத்திக்கான புதிய கல்வி முறையொன்று அவசியமாகும், என அவர் தெரிவித்துள்ளார். (04)

## இராணுவத்தினரிடம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி வாசுதேவ கூறியதுபோல், துப்பாக்கிக் குண்டு துளைத்திருப்பதனையும் காணக்கூடியதாக இருந்தது எனவும், இனிப்புச் சுற்றி வரும் கடதாசி ஒன்றும் அதில் பகுப்பாய்விற்கு எடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், தாங்கள் அவதானித்த வகையில் கண்ணைக் கட்டும் துணி கூட எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தான் கூறியது போல், 2009 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் சரணடைந்த விடுதலைப்புலிகளைக் கொண்டுவந்து, கண்ணைக் கட்டி, துப்பாக்கியால் சுட்டு அல்லது சித்திரவதை செய்து, சரணடைந்த பிள்ளைகளை இவ்வாறு புதைத்திருக்கிறார்கள் என்பது தான் அறிந்த வகையில் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

## உயிர்த்த ஞாயிறு மீள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் உண்மைத்தன்மை மீண்டும் மீண்டும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது தொடர்பான மீள் விசாரணையை அது பற்றிய அறிவும் அனுபவமும் உள்ள ஷானி அபேசேகரவிடம் ஒப்படைக்க வேண்டும்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை விசாரிக்கவே மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஆணை வழங்கினர்.

எமது நாட்டில் வெளிப்படையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைப் பயன்படுத்தி ஜனாதிபதிப் பதவியைப் பெற்று, அரசாங்கம் அமைத்து, அமைச்சுப் பதவிகளையும் பெற்று இன்று இது பற்றித் தவறான கருத்துக்களை வெளியிடுவதில் அர்த்தமில்லை.

எங்களுக்கு உண்மை மட்டுமே வெளிப்பட வேண்டும். சேறுபூசும் அரசியலில் ஈடுபட நாங்கள் தயாராக இல்லை. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக உரிய முறையில் விசாரணை நடத்திய ஷானி அபேசேகர சிறையிலடைக்கப்பட்டதன் மூலம் சில விடயங்கள் பற்றிய உண்மை புலப்படுகிறது, என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை கைவிலங்குகள் இல்லாமல், கழுத்தில் கயிறுகள் பிணைக்கப்படாமல், ஷானி அபேசேகரவிடம் வழங்க வேண்டும், என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (க)

## கொக்குத்தொடுவாயில் இன்றும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்போது, மனித எச்சங்களுடன் இரண்டு துப்பாக்கித் தோட்டாக்கள் எனக் கருதப்படக்கூடிய உலோகப் பகுதிகள், ஆடைகள் உள்ளிட்ட பல்வேறு தடயப் பொருட்களும் அங்கிருந்து எடுக்கப்பட்டுள்ளன. (க)





உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமானக் கண்காட்சி 2023 அடுத்த வாரம் பிரமாண்டமாக யாழ் முற்றவெளியில்




"யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமானக் கண்காட்சி 2023 " எனும் தொனிப்பொருளில் கண்காட்சியொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் 15ஆம், 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை இக்கண்காட்சி நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த கண்காட்சி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகச் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ தனியார் விடுதியில் நேற்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்களான ஜங்கரன் மீடியா சொலுஷன் பணிப்பாளர் நடராஜா கார்த்திக் விபரங்களைத் தெரிவிக்கையில்,

கண்காட்சியில், கட்டிட நிர்மாணம் தொடர்பான சகல விதமான சேவைகள், விபரங்கள் மற்றும் ஆலோசனைகளோடு, வீட்டு உபகரணங்கள் அவற்றின் பயன்பாடுகள் அடங்கலாக பலதரப்பட்ட விடயங்களும் ஒரே கூரையின் கீழ் இடம்பெறவுள்ளன.

வடக்கில் உள்ள மக்களுக்குக் கட்டட நிர்மாணத்துறையில் உலகளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுப் பயன்பாட்டில் உள்ள தொழிநுட்பம் உள்ளிட்ட அனைத்து விதமான விடயங்களையும் அறிமுகப்படுத்தும் நோக்குடனேயே இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளோம்.

இதில் வடக்கில் உள்ள கட்டட நிர்மாணத்துறையினர் உள்ளடங்கலாக இலங்கையின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் பலரும் கலந்து கொள்ளவுள்ளதனால், ஒரே இடத்தில் வடக்கு மக்கள் கட்டட நிர்மாணத்துறை தொடர்பான பல்வேறுபட்ட விடயங்களையும் அறிந்து கொள்ள முடியும்.

நுழைவுச் சீட்டுக் கட்டணமாக 50 ரூபாவை அறவிடத் தீர்மானித்துள்ளோம்.

இதேவேளை, கட்டட நிர்மாணத்துறை தொடர்பிலான வல்லுநர்களினால் இலவசக் கருத்தரங்கை நடாத்தவுள்ளோம். 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள இலவசக் கருத்தரங்கில் துறைசார் வல்லுநர்கள் பங்கேற்கவுள்ளனர். அதில் கலந்து கொண்டு பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், நகர அபிவிருத்தி அதிகார சபையினரின் ஒரு காட்சிக் கூடமும் அங்கு அமைக்கப்படவுள்ளது. அங்கு அதிகாரிகள் இருப்பார்கள். அவர்கள் ஊடாக கட்டடங்களை நிர்மானிப்பதற்கு, நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் எவ்வாறு அனுமதி பெறவேண்டும்?, அதற்கான நிபந்தனைகள், நடைமுறைகள் என்பவை தொடர்பாகக் கேட்டு அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறாக கட்டட நிர்மாணத்துறை தொடர்பிலான அனைத்து விதமான விடயங்களையும் ஒரே இடத்தில் பார்வையிட்டு அவற்றினாலான சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதால் கண்காட்சிக்கு அனைவரும் வருகை தந்து பயன் பெறுங்கள், என தெரிவித்தார். (01)

# நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சூர்யோற்சவம் இன்று காலை





நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின் 19ஆவது நாள் திருவிழாவான சூர்யோற்சவம், இன்று காலை நடைபெற்றது. காலை 6.45 அளவில் நடைபெற்ற வசந்தமண்டபப் பூசையை அடுத்து, ஏழு குதிரைகள் பூட்டிய இரதத்தில் எழுந்தருளிய சூரிய பகவான், உள் வீதி, வெளி வீதியுலாவும் வந்தார். (01)




JAFFNA'S FIRST HOUSING & CONSTRUCTION EXHIBITION
JAFFNA HOUSING & CONSTRUCTION EXHIBITION 2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு மற்றும் வீட்டு உபகரணங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர் Kalaikkathir

# ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்கமுடியாத நிலை ஸ்பெயின் அதிபருக்குக் கொரோனாத் தொற்று

டெல்லியில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டில் ஸ்பெயின் நாட்டின் ஜனாதிபதி பெட்ரோ சான்செஸ் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி-20 அமைப்புக்கு இம்முறை இந்தியா தலைமை தாங்கியுள்ளது. இந்த நிலையில் நாளையும் நாளை மறுநாளும் டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தின் பாரத் மண்டபத்தில் ஜி-20 உச்சி மாநாடு நடைபெற வுள்ளது.

இதனை முன்னிட்டு பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் இந்தியாவிற்கு வருகை தர உள்ளனர்.

அந்த வகையில் ஸ்பெயினின் ஜனாதிபதி பெட்ரோ சான்செஸ், இந்தியாவிற்கு வரவிருந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது மருத்துவப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், டெல்லியில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பெட்ரோ சான்செஸ், எனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே ஜி-20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக என்னால் டெல்லிக்கு செல்ல முடியாது.

அதே சமயம் முதல் துணை அதிபர் நடியா கல்வினோ, பொருளாதார விவகாரங்கள் துறை அமைச்சர், வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோர் ஸ்பெயின் நாட்டின் பிரதிநிதிகளாக ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்பார்கள், எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ரஷ்ய ஜனாதிபதி புடின், சீன ஜனாதிபதி ஜின்பிங் ஆகியோர் ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்க மாட்டார்கள் என அறிவிப்பு வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)





# மராட்டிய அமைச்சர் மீது மஞ்சள் பொடி தூவி நூதன போராட்டத்தை நடத்திய நபர்

இந்தியாவின் மராட்டிய மாநிலத்தின் வருவாய்த்துறை அமைச்சர் ராதா கிருஷ்ணா விகே பாட்டீல், இன்று சோலாபூரில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் பொதுமக்களைச் சந்தித்தார்.

அப்போது அவரிடம் 'தங்கர்' என்ற சமுதாயத்தைச் சேர்ந்த இருவர் கோரிக்கை மனு அளித்தனர். அவர்களிடம் அமைச்சர் ராதாகிருஷ்ணா மனுவை வாங்கிய சமயத்தில், திடீரென ஒரு நபர் தன்னிடம் இருந்த மஞ்சள் பொடியை அமைச்சரின் மேல் தூவி, கோஷம் எழுப்பத் தொடங்கினார்.

இதையடுத்து உடனடியாக அமைச்சர் அருகில் இருந்தவர்கள் அந்த நபரை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனால், அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

அமைச்சரின் மீது மஞ்சள்ப் பொடியைத் தூவிய நபரின் பெயர் சேகர் பங்கலே என்பது தெரிய வந்துள்ளது. தங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் நீண்ட காலமாக இட ஒதுக்கீடு தொடர்பான கோரிக்கையை முன்வைத்து வருவதாகவும், இது தொடர்பாக அரசின் கவனத்தைப் பெறவே அமைச்சரின் மீது மஞ்சள் பொடியைத் தூவியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து அமைச்சர் ராதாகிருஷ்ணா கூறுகையில், மஞ்சள் என்பது புனிதமான பொருளாகக் கருதப்படுவதால், இது குறித்து எந்த வருத்தமும் இல்லை, என்று தெரிவித்தார்.

மேலும், நூதன முறையில் போராட்டம் நடத்திய நபர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று அதிகாரிகளிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

# இந்தியாவின் பெயரை மாற்ற கோரிக்கை வந்தால் பரிசீலிப்போம் – ஐ.நா. பதிலளிப்பு

டெல்லியில் நடைபெறும் ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்ளும் உலகத் தலைவர்களுக்கு இந்தியஜனாதிபதி மாளிகையில் இரவு விருந்து அளிக்கப்படவுள்ளது. இதற்காக ஜனாதிபதி மாளிகையின் சார்பில் விருந்தினர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழில் இந்திய ஜனாதிபதி என்பதற்குப் பதிலாக பாரத ஜனாதிபதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து இந்தியாவின் பெயரை பாரதம் என மாற்றுவதற்கு முயற்சிகள் நடப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெசின் செய்தித் தொடர்பாளர் பர்ஹான் ஹக்கிடம் இந்தியாவின் பெயரைப் பாரதம் என்று மாற்றுவதை



ஐ.நா. ஏற்குமா என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த பர்ஹான் ஹக், "கடந்த ஆண்டு துருக்கி நாட்டின் பெயரை துருக்கியே என மாற்றுவதற்கு அந்த நாட்டின் அரசாங்கத்தால் எங்களுக்கு வழங்கப்பட்ட முறையான கோரிக்கைக்கு நாங்கள் பதிலளித்தோம். அதுபோலவே இந்தியாவின் பெயரை மாற்றுவதற்கான கோரிக்கை வந்தால் பரிசீலிப்போம், என்றார். (04)

# இந்திய ஜனாதிபதியின் விருந்தில் பங்கேற்கிறார் மம்தா பானர்ஜி



இந்தியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா போன்ற வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளை உள்ளடக்கிய இந்த அமைப்பின் உச்சி மாநாடு டெல்லியில் நாளையும் நாளை மறுநாளும் நடைபெறவிருக்கிறது.

நாளை இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு சார்பில் வழங்கப்படும் இரவு விருந்தில் பல்வேறு நாட்டு அதிபர்களும் உள்நாட்டுத் தலைவர்களும் பங்கேற்க உள்ளனர்.

முர்முவின் அழைப்பை ஏற்று இரவு விருந்தில் பங்கேற்பதற்காக மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி டெல்லிக்குச் சென்றுள்ளார். தலைநகருக்குச் செல்லும் மம்தா பானர்ஜி பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச உள்ளார்.

மேலும், பங்களதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவைச் சந்தித்து, அவருடன் நல்லுறவைப் பகிர உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (04)

# வட கொரியாவுக்கு எந்த நாடும் ராணுவ ஒத்துழைப்பு வழங்கக் கூடாது! - தென் கொரிய அதிபர் தெரிவிப்பு

வட கொரியாவுக்கு எந்த நாடும் ராணுவ ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்று தென் கொரியா வலியுறுத்தி உள்ளது.

சர்வதேச அமைதியைக் கெடுக்கும் வகையில் ராணுவ விவகாரங்களில் வடகொரியாவுடன் ஒத்துழைக்கும் எந்த முயற்சியும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று தென் கொரிய அதிபர் யூன் சுக் இயோல் கூறியுள்ளார்.

இந்தோனேசியாவில் நடைபெற்ற தென்கிழக்கு ஆசியாவின் ஆசியான் உச்சி மாநாட்டில் தென் கொரிய அதிபர் இந்தக் கருத்தைத் தெரிவித்ததாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. ஆனால், இது தொடர்பான விரிவான தகவல் எதையும் அதிபர் அலுவலகம் வெளியிடவில்லை. வட கொரியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே ஆயுதங்கள் சப்ளை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாகவும், வட கொரியத் தலைவர் கிம் ஜங் உன், ரஷ்ய அதிபர் புடினைச் சந்திக்க விரைவில் ரஷ்யாவிற்குச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், தென் கொரிய அதிபரின் கருத்து மறைமுகமாக எச்சரிக்கை விடுப்பதாக அமைந்துள்ளது. இதற்கிடையே ஆயுத விநியோகம் தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்று வட-கொரியாவும் ரஷ்யாவும் மறுத்துள்ளன. (04)



# மாவட்ட நிலைச் சாதனை மாணவர்களை கௌரவித்த தம்பிலுவில் தேசிய பாடசாலை

(வி.ரி. சகாதேவராஜா)

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் கணித பாடத்தில் மாவட்ட நிலையில் மெரிட் சாதனை படைத்த மாணவர்கள் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கௌரவிக்கப்பட்டார்கள்.

கணித பாடத் துறையில் மூன்று ஏ சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் நிலையில் இருக்கின்ற ஆர். கம்ஷயன், மாவட்டத்தில் 5 ஆம் நிலையில் இருக்கின்ற குணபாலன் சஞ்சயன், மாவட்ட நிலையில் 7ஆம் இடத்தில் இருக்கின்ற ஆர்.அருணியா ஆகிய மூன்று கணிதத்துறை மாணவர்களுடன், கலைத்துறையில் மூன்று ஏ சித்தி பெற்ற எஸ். தட்சணா ஆகிய நால்வரும் பாடசாலையில் கௌரவிக்கப்பட்டார்கள்.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய அதிபர் திருமதி கோமளா பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திருக்கோவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் கலந்து சிறப்பித்தார்.

மாவட்ட நிலைச் சாதனை மாணவர்களின் பெற்றோரான தென் கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ்.குணபாலன் தம்பதியர் உள்ளிட்டவர்களும், கற்பித்த இரசாயனவியல் ஆசிரியர் ஜெயகாந்தன் உள்ளிட்ட ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.



# சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் உறுப்பினருக்கு தெளிவூட்டும் செயலமர்வு





(நூருல் ஹுதா உமர்)

சமுர்த்தி வங்கிகளின் செயற்திறனை வலுவூட்டும் நோக்கில் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.எஸ். எம். சப்ராஸினால் தயாரிக்கப்பட்ட சமுர்த்தி வங்கியின் செயற்திறன் மதிப்பீட்டு அறிக்கை கைநூல் பற்றி சாய்ந்தமருது பிரதேச செயலக வெளிக்கள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு இன்று சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி காரியால வங்கி கண்காணிப்பு உத்தியோகத்தர் ஏ.ஜே. எம்.ஹனீபா கலந்து கொண்டார்.

இந்தச் செயலமர்வில், பிரதேச செயலகத் தலைமைப்பீடச் சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், கருத்திட்ட முகாமையாளர் எஸ்.நிபாயா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.ஹிதாயா உள்ளிட்ட சாய்ந்தமருது பிரதேச செயலக வெளிக்கள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.




# 330 தானியங்கி மழைமானிகளில் 72 செயலற்ற நிலையில் உள்ளன

நிலச்சரிவு அபாய எச்சரிக்கைகளை வழங்குவதற்காக அதிக ஆபத்துள்ள 14 மாவட்டங்களில் 330 தானியங்கி மழைமானிகள் நிறுவப்பட்டிருந்தாலும், அவற்றில் கடந்த வருடம் செப்டெம்பர் 15 வரையிலான காலப்பகுதி வரையில் 72 மழைமானிகள் செயலற்ற நிலையில் இருப்பதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியாளர்கள் பற்றாக்குறை உட்பட இன்னும் பிற காரணங்களால் இந்த மழைமானி அமைப்புகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த மழைமானி அமைப்புகளை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகமே பராமரிக்க வேண்டும் எனவும், போதிய பராமரிப்பு இல்லாதபோது, தானியங்கி மழைமானி அமைப்புகளின் தரவுப் பரிமாற்றத்தில் ஏற்படும் தடைகள் துல்லியமான நிலச்சரிவு தொடர்பாக முன் எச்சரிக்கையை வெளியிடுவதில் அது பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கணக்காய்வு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன நிர்வாகம் மேற்படி கணக்காய்வு அலுவலக அறிக்கைக்கான பதிலளிப்பில், 14 இடர் மாவட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட சில எண்ணிக்கையிலான மழைமானிகள் பழுதடைந்துள்ளதாகவும், இருப்பினும் வானிலை ஆய்வு நிலையத்தின் வானிலை முன்னறிவிப்புகளையும் அருகாமையில் பொருத்தப்பட்டுள்ள மழைமானிகளையும் பயன்படுத்தி, அறிவியல் கணிப்பின்படி இடர் எச்சரிக்கைகளை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தொடர்பான 2022 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அலுவலக அறிக்கையிலேயே மேற்படி விடயம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெ-09)

# உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்து கணிசமான அளவில் குறைவடைந்தது!

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துக்களின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துக்கள் ஜூலை 2023 இல் 3,765 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து ஓகஸ்ட் 2023 இல் 3,598 மில்லியன் டொலர்களாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது 4.4 வீதக் குறைவு எனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சீனாவின் மக்கள் வங்கியின் ஸ்வப் வசதியின் கீழ் வழங்கப்பட்ட 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி வசதியும் இதில் அடங்கும் எனவும் குறிப்பிடப்படுகிறது. (04)

# பாதுகாப்பு நிலைவர மீளாய்வு தொடர்பிலான ஜனாதிபதியின் யோசனை அமைச்சரவைக்கு



தேசிய பாதுகாப்புக் கொள்கை தயாரிப்பின் முதற் கட்டமான "பாதுகாப்பு நிலவர மீளாய்வு - 2030" என்ற யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நியதிகளுக்கமைய சவால்களை எதிர்கொள்வதற்கான மாற்று அணுமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக "பாதுகாப்பு நிலவர மீளாய்வு - 2030" அவசியப்படுகிறது. அதன்படி இந்த மீளாய்வு மாநாட்டில் 2023 வரையான மற்றும் அதன் பின்னரான அணுகுமுறைகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

அதற்கமைய,

* 2030 இல் இலங்கையின் மூலோபாய அறிவு மற்றும் சவால்கள்
* இலங்கையின் பாதுகாப்பு முக்கியத்துவம்
* 2030 பாதுகாப்பு கொள்கையின் நோக்கங்கள்
* மூலோபாயச் சவாலை எதிர்கொள்ளும் இயலுமை மற்றும் வலு
* தற்போதுள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப அவசர தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல்

- உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

இதற்காக மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக்க (ஓய்வு) தலைமையிலான, மீளாய்வுக்குழு நியமிக்கப்பட்டிருப்பதோடு, அந்த குழுவில் ரியர் அட்மிரல் ஜே.ஜே. ரணசிக் (ஓய்வு), மேஜர் ஜெனரல் ஜீ.ஆர். வணிகசூரிய (ஓய்வு), எயார் வைஸ் மார்ஷல் எண்ட்ரூ விஜேசூரிய (ஓய்வு), சஷிகலா பிரேமவர்தன (இலங்கை வெளிநாட்டுச் சேவை) டேனியல் அல்போன்ஸ் (ஆலோசகர் - நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு) ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சேவையிலிருக்கும் முப்படை அதிகாரிகள், வெளிநாட்டு சேவை அதிகாரிகள், திறைசேரி அதிகாரிகள், நிபுணர்கள் மற்றும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படவுள்ள செயலாளர் ஒருவரும் பணிக்குழுவும் அதற்காக ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளது. (03)




# கைப்பேசி மூலம் நட்பான காதலனைத் தேடி வந்த காதலி மீது பாலியல் துஷ்பிரயோகம்

15 வயதுடைய சிறுமியொருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றத்திற்காக 19 வயதுடைய இளைஞரொருவர் கொக்கவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இளைஞனுக்கு ஆதரவாக இருந்த அவரது பெற்றோரையும் பொலிஸார் கைது செய்தனர்.

ஹொரணை பிரதேசத்தில் வசிக்கும் இந்த 15 வயது சிறுமி, துடுவெவ பிரதேசத்தை சேர்ந்த 19 வயது இளைஞனுடன் கைப்பேசி மூலம் காதல் கொண்டுள்ளார். இந்தச் சிறுமி தனது வீட்டாருக்குத் தெரியாமல் இரகசியமாக பஸ்ஸில் ஏறி, துடுவெவ கிராமத்தில் வசிக்கும் இளைஞனைத் தேடி வந்துள்ளார்.

இளைஞனின் வீட்டில் இரவு தங்கியிருந்த நிலையில், இளைஞனின் தந்தை கொக்கவெவ பொலிஸில் இதுகுறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து, சிறுமியையும் குறித்த இளைஞனையும் வீட்டில் இரவைக் கழிக்க உதவிய இளைஞனின் பெற்றோர் இருவரையும் கொக்கவெவ பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரெ - 08)



# எசல பெரஹரவின் போது கண்டி நகரில் 250 தொன் குப்பை கூழங்கள் குவிந்தன

கண்டி எசல பெரஹெர இடம்பெற்ற பத்து நாட்களில் நகர எல்லையில் இருந்து 250 தொன்களுக்கும் அதிகமான குப்பைகள் சேகரிக்கப்பட்டதாக நகர சபையின் கழிவு முகாமைத்துவப் பிரிவின் பிரதம பொறியியலாளர் நாமல் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஊர்வலத்தின்போது மக்கள் கொண்டு செல்லும் பொலித்தீன்கள், வீசியெறியப்படும் உணவு மீதிகள், யானை லாயங்களிலிருந்து கொட்டப்படும் கழிவுகள் என நாளொன்றுக்கு சுமார் 25 தொன் அளவு குப்பைகள் இவ்வாறு சேர்ந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அவைமட்டுமன்றி, ஊர்வலத்திற்காகக் கொண்டுவரப்பட்ட ஏறக்குறைய நூறு யானைகள் நிறுத்தப்பட்டிருந்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மரக்குற்றிகள், யானைகளின் கழிவுகள் உள்ளிட்ட 15 தொன்னுக்கும் அதிகமான கழிவுகள் நாளொன்றுக்கு சேகரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் விளையாட்டுப் பொருட்கள், உணவுப் பெட்டிகள் என கிட்டத்தட்ட ஐந்து தொன் கழிவுகள் மற்றும் வீசப்பட்ட ஐந்து தொன் உணவு வகைகள் தினசரி சேகரிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக இவ்வாறு சேகரிக்கப்பட்ட 250 தொன்களுக்கும் அதிகமான கழிவுகள் தற்போது கொஹாகொட பிரதேசத்தில் மீள்சுழற்சி செய்வதற்காக வகைப்படுத்தப்பட்டு வருவதாகவும், இவ்வாறான குப்பைகளை வகைப்படுத்துவது இலகுவானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டார். (ரெ - 07)

# குடும்ப அரசியல் முடிவுக்கு வரவேண்டும்! ஆளுங்கட்சி உறுப்பினர் உத்திக பிரேமரத்ன

ஆளும்கட்சியின் அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளார்.

2020 இல் ஒரு முறைமை மாற்றத்திற்காக நாடாளுமன்றத்திற்குள் நுழைந்த போதும் அது விரைவாக நடக்கும் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் குடும்ப அரசியல் முடிவுக்கு வரவேண்டும் என்றும் தங்களைப் போன்ற சாதாரண இளைஞர்களும் நாட்டுக்குத் தலைமை தாங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவேதான், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதற்குத் தான் தீர்மானித்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2023இல் வெளியிடப்பெற்றது.